1450

# பூலோகப் பாட

O-,1M8N4tP
N31
120680

ஸ்ரீ

மக்கள் வாழ்க்கையின் முற்கால, தற்கால நாகரீக விபரீதங்களையும்;

யுகதர்மங்களின் மாறுதல்களையும்;

தொன்றுதொட்டு கையாண்டுவந்த நீதியைத் துறந்து, அக்ரமச் செய்கையில் தலைசிறந்து, பிறந்த பிறப்பாற் பெறும் பேறுபெறாமல் வருந்துவதையும் வெள்ளிடை மலைபோல் விளக்கும்,

# பூலோகப் புரட்சி,

என்னும்:

## காலாகோலக் காட்சி.

By

G. NARAYANASAMI NAIDU,

VANDUVANCHEARI.

விஜயபுரம் கீர்த்தன இரத்னாகரம்,

**உயர்திரு சி. முத்துசாமித்தேவர் அவர்கள்**

சொன்னோக்கத்திற்கு நன்னோக்காக,

கல்லுபட்டி, உயர்திரு

சு. நா. சு. மே. சுப்ரமண்யஞ் செட்டியார் அவர்கள்

பேருதவியைக்கொண்டு

கீவளூர் சக்ரவர்த்தி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர்டு.

கலி, 5033.

கிடைக்குமிடம்

லோகநாயகி புத்தகசாலை,

விஜயபுரம்—திருவாரூர்.

ஸ்ரீ

# பூலோகப் புரட்சி என்னும் காலாகோலக் காட்சி.

ஏற்புடைக் கடவுள் வணக்கமும், வழிபடு கடவுள் வணக்கமுமாகிய

## காப்புச் செய்யுள்.

அறுசீர் விருத்தம்.

பூலோகப் புரட்சியெனுங் காலாகோ
லக்காட்சிப் பொதுநூல் கீதத்
தாலோதக் கார்மேனிக் கடவுள்நிறக்
கடலாடை தரணி மாந்தர்
சாலோக சாமீப சாரூப
சாயுச்யந் தனித்து நல்கும்
மேலோக விருப்புமல வெறுப்புமுறத்
துதிக்கையனை விளம்பு வேனே.

## இந் நூல் செய்தற்குக் காரணம்.

அறுசீர் விருத்தம்.

முற்கால முழுதுணரும் பெரும்புலவர்
நீதியெலாம் மொழிந்தார் ஆனல்
பிற்காலங் கூர்ந்தறிவார் ஒருசிலரால்
எளியநடை பெருங்கீ தத்தில்
தற்கால நாகரிகம், மாற்றம், அநீ
தமுங்கூட்டித் தண்பா ரோர்க்கு
சொற்கால மெனக்கண்டு சுடர்விளக்கின்
கிளர்கோலாய்ச் சொன்னேன் மன்னே.

நூல்.

## தற்கால நாகரீகம்.

தாயிடத்தில் அன்பில்லாத என்ற மெட்டு.

நானிலத்தில் வரவரநவ நாகரீகமே இந்த
நானிலத்தில் வரவரநவ நாகரீகமே

மேனாட்டுக் கொள்கையென்னும்
மேடைநட மாடும்இந்த
மாநாட்டில் ஆதிவாழ்வை
மறந் தனரே நானி (1)

நாட்டுசுய ராஜ்ஜியந்தான்
நங்களுக்கு காந்திமகான்
வாட்டமுடன் கேட்டுக்கொள்ள
வந் தனரே நானி (2)

நங்கையர்கள் பூச்சிக்கூடு
நாகபடம் அணிவர்இப்போ
தொங்கவளர் காதில்வயிரத்
தோடாச்சுதே நானி (3)

நாகரிக மென்பதாலே
நத்தும் புலாக்கும் விட்டுப்
போகவெள்ளை மூக்குத்தியொன்றும்
பூண் பார்களே நானி (4)

கண்ணாடி வளையலெல்லாம்
காணாமல் போச்சுதிப்போ

பொன்னான வளையலெங்கும்
    பூண் பார்களே    நானி    (5)

செஞ்சலவைப் புளியங்கொட்டை
    சேலைகட்டுங் காலமற்று
பஞ்சவர்னக் கொட்டடிவேண்டும்
    பாங் காச்சுதே    நானி    (6)

பெண்களிரு தோள்வரையில்
    பெட்புடனே அணிவரிப்போ
முன்கைமட்டும் ரவிக்கைபோடும்
    முறை யாச்சுதே    நானி    (7)

வங்காள மஞ்சள்பூசி
    மைதீட்டுங் காலஞ்சென்று
மங்காத முகத்தில்பூதர்
    மா வாச்சுதே    நானி    (8)

கோணல்வா கெடுத்துசடை
    குஞ்சமென ரிப்பன்வைத்து
வேணுமலர்ச் சடையும்பின்னி
    விட லாச்சுதே    நானி    (9)

பாடி ரவிக்கையாச்சு
    பட்டாண்கர்ச் சிப்புமாச்சு
தேடிவரும் ஆட்டோடில்பகார்
    ஸெண் டாச்சுதே    நானி    (10)

கோதைமார் தினந்தினமும்
    குங்குமப்பொட் டிடுவரந்தோ?

பாதிமதி போன்ற நுதலும்
பா ழாச்சுதே நானி (11)

பேணிவருந் தலைமயிரும்
பியர்ஸோப் போட்டுநித்தம்
நாணற்பூப் போலநரைக்கும்
நா ளாச்சுதே நானி (12)

சோப்பாலே முகங்கழுவி
ஷோக்காளர் க்ராப்புவைத்து
சீப்புங்கண் ணாடியுமாகத்
திரி வார்களே நானி (13)

வதனா, ஜெயா, சரசா,
வனஜா,வென் றழைப்பதானா்
இதமான தெய்வப்பேரும்
இழந் தார்களே நானி (14)

நள்ளிரவில் மிகக்குலைக்கும்
நாய்க்கிடும் பேரைவைத்து
பிள்ளைகளை யழைக்கும்போது
பே பியென்பார் நானி (15)

பணியாரம் தோசையப்பம்
பாகுருண்டை யதிரஸமும்
இனிமேலும் செய்வரோவென்
றிகழ் வார்களே நானி (16)

பேர்குலேப் ஜானும்,பர்ப்பி,
பேடாவும், மைசூர்பாக்கும்,

பூரியல் வாவென்றெங்கும்
புகழ்வார்களே நானி (17)

எண்ணெய்விளக் கில்லாமலே
எலெக்ட்ரிக்கு லைட்டினாலும்,
மண்ணெண்ணெயி னாலுங்கண்கள்
மறைவாச்சுதே நானி (18)

இந்நிலத்திற் சாமி! ஐயா!
வென்பார்கள் கூப்பிடுங்கால்
தன்னைமதி யாரென்றெண்ணி
சார்! சார்! என்பார் நானி (19)

செல்வீகம் வந்ததென்றால்
தெய்வீக மென்றுசொல்லார்
கொல்லுமொரு பிணிவந்தாலென்
கோவே!யென்பார் நானி (20)

கலிகால

## மாறுதல்களும் ஏமாற்றங்களும்.

காந்தி சன்யாசி என்ற மெட்டு.

கலியுகத்தினிலே மாற்றம்
பல விதத்தினிலே

அக்காலத் திருந்தவர்கள்
அச்சமற வாழ்ந்திருந்தார்
தற்காலம் பயமிகுந்து
ததிங்கிணத்தோம் போடலாச்சு கலி (1)

கூழும், பழஞ்சோறும்
குடித்துநெடு நாளிருந்தார்
பழான காப்பிவர
பலமொழிந்து நோயடைந்தார் கலி (2)

காதம் பத்தானாலும்
கடுகிவழி நடந்துவந்தார்
மோதுரயில் வந்தவுடன்
முழங்கால் முறிந்ததுவே கலி (3)

மாட்டுவண்டி குதிரைவண்டி
மேட்டிமையாய் ஓட்டியதை
மோட்டாரும், பஸ்ஸூம்வந்து
முன்வரவொட் டாமற்செய்யுங் கலி (4)

நூறுவய தின்மேலே
தீரமுடன் வாழ்ந்ததுபோய்
கூறுமதிற் பாதியாண்டுங்
குதிரையின்கொம் பாச்சுதிப்போ கலி (5)

முப்பதாம் ஆண்டளவில்
முடிபோடும் திருமணத்தை
செப்பமுடன் பாலியத்தில்
செய்துயிரை வாட்டிவருங் கலி (6)

எவ்வனத்தைக் காண்பதன்முன்
ஈன்றபல பிள்ளைகளும்
தவ்வியெழுந் தலரிவந்து
தனித்தனியாய்ப் பிடித்திழுக்குங் கலி (7)

தெரிந்தரச ரியற்றிவைத்த
    தேவால யங்களெல்லாம்
இருந்தவிடந் தெரியாமல்
    வெறுந்திடலா யிடிந்தழியும்   கலி   (8)

ஆங்கிலந்தேர் மாணவரில்
    அப்பா!வென் றழைப்பதின்றி
தாங்களுடன் கேட்பவர்க்கு
    டேம்ஓல்டு பகரென்பார்கள்   கலி   (9)

நாட்டுப்பெண் மாமியுடன்
    மல்லாடிப் பெருங்கலகம்
மூட்டியினி யொன்றாய்வாழ
    முடியாதென் றடுப்புவைக்கும்   கலி   (10)

ஆதியிற்கை ராட்டினத்தால்
    வீடுதொறும் நூல்நூற்று
மேதினியிற் சுகித்ததுபோய்
    மேனாட்டுத் துணிகள்வாங்கும்   கலி   (11)

பெண்களுக்கு நூல்நூற்கும்
    பேராவ லில்லாமையால்
வம்பை விலைக்கு வாங்கி
    மானங்கெட் டறிவிழக்கும்   கலி   (12)

பாரறிய நோய்களின்றி
    பூரங்குபெற வாழ்ந்ததுபோய்
பேரெழுதத் தொலையாத
    பெரும்பிணிவந் துயிரைவாங்குங்   கலி   (13)

பச்சிலையைக் கொண்டுவந்து
பலநோயும் போக்குதல்போய்
இச்சைவைத்து டாக்டர்தம்மை
யென்னெதிர்கொண் டாவென்பார்கள் கலி (14)

முற்காலத் திருந்தவர்கள்
*மொய்ம்புடனே வாழ்ந்துவந்தார்
தற்காலம் பில்தடுக்கித்
தடுமாறி விழுகின்றார்கள் கலி (15)

ஆனதன வந்தரெல்லாம்
ஆண்டுவந்த திரவியங்கள்
போனவிடந் தெரிந்திடாமல்
போவதென்ன மாயமந்தோ? கலி (16)

சிங்கம்போல் வீரரெல்லாம்
ஜெயக்கொடியை நாட்டிவந்தார்
பங்கமுற்று, ரோஷங்கெட்டு
பழவண்ணான் கல்லானார்கள் கலி (17)

எவ்வனத்திற் கேற்றபொருள்
இல்லாமற் பலவகையில்
செவ்விமிகும் வாலிபர்கள்
திண்டாட்டப் படும்இறுதிக் கலி (18)

ஓரூரில் விளைவதெல்லாம்
உள்ளூரில் வாங்குதல்போய்
வேறூர்க்கு மூட்டைகட்டி
விற்றுவிலை அதிகமாச்சு கலி (19)

---

* மொய்ம்பு–பலம்,

சொற்பெரிய தாய்நாட்டுத்
துணியணிந்து சுகித்தவர்கள்
பொற்சரிகை வேட்டியுடன்
புதுச்சேரிப் பட்டணிவார் கலி (20)

போற்றிவருங் காந்திமகான்
புதையலெனக் கண்டெவர்க்கும்
சாற்றுகதர் அணிவதற்கு
தாரணியி லோர்மையில்லை கலி (21)

நாட்டவரிற் கேட்டைமிக
நயந்துதலை யிடுந்தருணம்
காட்டுசுய மரியாதையாங்
கட்சியொன்று தோன்றியதே கலி (22)

பாரதரா மாயணங்கள்
படிப்பதுவுங், கேட்பதும்போய்
கூறுசுய மரியாதையின்
கொள்கையைக்கொண் டிழிவுசெய்யுங் கலி (23)

உடற்பிறந்த வாஞ்சையினல்
ஓர்மனதாய் வாழாமல்
சுடச்சுடநின் றெதிர்பேசி
துரோகஞ்செய் தவதிப்படும் கலி (24)

பேராசை கொண்டவராய்
பிறர்பொருளை நஞ்சமென்று
தேராமல் மாற்றிமாற்றித்
தினந்தினமுஞ் சிலவுசெய்யுங் கலி (25)

நேரமா நிதப்பொருளை
நீகொடுக்க வில்லையென்று
தீரமுடன் ஆணையிட்டு
செல்வாக்கும் இழக்கலாச்சு கலி (26)

நம்பினோர் பெரும்பொருளை
நயவஞ்சகத் துடன்கவர்ந்து
வம்புசெய்யுங் குடிகேடர்
வாழ்க்கையற்றுப் போக்கொழியுங் கலி (27)

அடுத்தாரை யுபசரியார்
அழுதாலும் மனமிரங்கார்
கொடுப்பாரைத் தடுப்பதற்குக்
குறுக்கேநின் றவலப்படுங் கலி (28)

முற்றுநம்பி விட்டிருந்தோர்
முதலடித்துப் பொய்யெழுதி
சற்றுநன்றி யெண்ணாத
சண்டாளர்க் கிடங்கொடுக்குங் கலி (29)

பொய்சாட்சி சொல்வதற்குப்
போகாதே! பாவமென்றால்
கையைவி ரித்தாற்பாவங்
காணும்போம் எனவுரைப்பார் கலி (30)

கேளாமுன் கொடுத்தகடன்
கேட்பாரை யிழிவுசெய்து
தாளாண்மை பேசியவர்
தாழ்வாயில் அடிகொடுக்கும் கலி (31)

கொடுத்தார்கள் வயிறெரிய
கூசாமல் இல்லையென்பார்
திடுக்கிடத்தன் பொருளையெல்லாம்
திருடர்கையிற் பறிகொடுக்குங் கலி (32)

மெத்தவட்டி வாங்கியறம்
வேண்டார் உடம்பெல்லாம்
சத்திரம்வைத் தெமலோகஞ்
சார்வாரிவ் வுலகிற்கண்டோம் கலி (33)

நகரத்தார் மெத்தவட்டி
நயந்தானுஞ் செய்தருமம்
பகரத்தான் போமோஇந்த
பார்புவிக்கண் காணலாகுங் கலி (34)

காக்கும்அறஞ் செய்யாமல்
காணும் பெருங்குடும்பம்
சீக்கிரத்தில் நொடித்தடங்காச்
சித்தங் கலங்கியேங்குங் கலி (35)

வாழ்வோங்குந் தனவந்தரை
வரவேற்று விருந்துசெய்வார்
ஏழையொரு வேளைசென்றால்
எடுத்தும் பார்ப்பதில்லை கலி (36)

சிற்றூரில் ஒருவர்தினம்
செய்தொழிலைக் கண்டவுடன்
மற்றோரும் அதனைச்செய்து
நஷ்டமிரு வருக்குமாகுங் கலி (37)

கொழுப்பசுவின் வாலொருவன்
        கொம்பொருவன் எனதெனதென்
றிழுக்கையிலே வந்துவக்கில்
        இருந்துடன்பால் கரந்துகொள்ளுங் கலி (38)

உற்றாரை யழைத்துவந்து
        உபசரித்து விருந்திடுதல்
அற்றுறவை மறந்துதனி
        ஆனார்அநாதியாகக் கலி (39)

கற்றவர்கள் பேசுகையில்
        கல்லாருந் தெரிந்தவர்போல்
வெற்றுரையைத் தொடுத்திடையில்
        வீண்வாதம் பேசவருங் கலி (40)

போற்றும் புரோகிதரின்
        புத்திரர்கள் உத்யோகத்தை
‡ஆற்றுவதி விருந்துதிதிக்
        கழைத்தாலும் வருவதில்லை கலி (41)

மறையோதிப் பூணூல்நூற்று
        வந்தமறை யோர்கள்பல
துறையோடிப் பொருத்தமற்ற
        தொழில்புரியுங் காலமாச்சு கலி (42)

ஜாதிமத பேதமெல்லாம்
        சாஸ்வதமென் றிருந்ததுபோய்
ஓதுசம பந்தியிலே
        உணவருந்தி வருகின்றார்கள் கலி (43)

---

‡ஆற்றுதல்—செய்தல்,

ஆஸ்திகரிற் பலசுகங்கள்
அநுபவிக்கும் காரணத்தால்
நாஸ்திகராய் வெளிக்கிளம்பி
நாசமுறத் தலைப்பட்டார்கள் கலி (44)

தானியங்கள் அரைக்குமில்கள்
தாரணியில் எங்கும்வந்து
ஈனமிகப் பெண்கள்பலம்
இருந்ததையும் இழக்கலுற்றார் கலி (45)

ஒவ்வொன்றிற் கோர்கால
வுயர்வுசில நாளானல்
அவ்விதம்போய் வேறொன்றுக்
காசைவைப்ப துலகப்போக்கு கலி (46)

# கலியுக அக்ரமங்களும்; காலாகோலங்களும்.

சிந்து.

கலியுக வேகம் அக்ரமமிஞ்சிக்
காண்பதனேகம்
எளியோரை வலியோர்கள்
இழுத்து மடிபிடித்து
புலிபோ லறைந்தவரைப்
பழிவாங்கித் திரிகின்ற கலியுகமே (1)

அவதியை யறிந்து செய்தநன்றியை
அடியோடு மறந்து
கவலை யொழித்தவரைக்
கண்டவர் யாரென்று
அவலப் படுவர்சற்றும்
அறியாம லுரைக்கின்ற கலியுகமே (2)

பெண்டிரை வைது கண்ணீர்சிந்திப்
பிரிந்திடச் செய்து
மற்றோரைத் தொடர்கின்ற
மனையா ளுடன்கலந்து
வற்றாத சுகபோக
வாழ்க்கையி லிருக்கின்ற கலியுகமே (3)

தருவேனென் றேக மனதாய்ச்சொல்லி
தானங்கு போக
பிரிய மிருந்தப்போது
பேச்சுக்கு நான்சொன்ன

மருமந் தெரியாமலே
வரலாமோ நீயென்னும் கலியுகமே (4)

## கட்குடியால்வருங் கஷ்டம்.

பஞ்சபா தகத்தில் ஒன்றெனுங்கள்ளைப்
பருகுவ ரிகத்தில்
அஞ்சும் படிநிதமும்
அனுஷ்டிப் பவர்குடிக்கக்
கஞ்சிக் கலைந்துபடுங்
கஷ்டத்தை யென்சொல்வேன் கலியுகமே (5)

### மானக்குடி.

பாதகயிற் கள்ளை மற்றவருற்றுப்
பார்த்திடிற் சள்ளை
ஆதலாற் பெருங்கோழி
அடித்தறை வீட்டுக்குள்
மாதரை யுடன்கூட்டி
மானக் குடிகுடிக்கும் கலியுகமே (6)

### ஈனக்குடி.

கடைதோறும் ஓடி சாராயத்தைக்
கண்டுகொண் டாடி
குடியென் றிருந்தவர்க்குங்
கொடுத்துக்கூத் தாடித்தன்
இடையில் துணியிழந்தும்
ஈனக் குடிகுடிக்கும் கலியுகமே (7)

## மத்யானக்குடி.

மத்யானக் குடியால் லாகிரிமிஞ்சி
மயங்கின படியால்
சத்தமிட் டெழுந்தோடித்
தடுமாறி விழுந்ததும்
கக்கிக் கிடந்துதெருக்
கடையிற் புரளுகின்ற கலியுகமே (8)

கருப்பெற்றநாளாய் இன்னமுங்காக்குங்
கடவுளுக் காளாய்
விருப்புற் றுலயந்தொழ
வேண்டுமென் றுற்கல்லே
தெரிசிப் பதனுல்கைக்கு
சிலவுக் காகுமோவென்னுங் கலியுகமே (9)

அம்மியை மிதித்து அருந்ததியை
அனேவர்முன் துதித்து
நம்பு மணேயவளே
நட்டாற்றி லேவிட்டு
துன்பந் தரும்வேசையைத்
தொடர்ந்தவ ருடன்கூடுங் கலியுகமே (10)

நீட்டோலேபிடித்து பெரியோர்சொன்ன
நீதியைத் தடுத்து
எட்டுச் சுரைக்காய்கறிக்
கினிப்பைத் தருமோபழம்
பாட்டிக் கதையையென்முன்
பாடாதே நீயென்ற கலியுகமே (11

நம்பிக்கை மோசம்   செய்தவர்க்கெழு
நரகத்தில் வாசம்
துன்பப் படுவாரென்று
சொன்னாலுங் கேளாமல்
இன்றைக்குச் சுகமானால்
இனியான் அறிவேனென்னுங் கலியுகவே (12)

தெய்வத்தைப் பழித்து   அளவில்லாத
தீவினை யிழைத்து
வையத் தெதிரியொரு
வருமில்லை யென்றெங்குங்
கைகொட்டிப் பலர்வீணிற்
காலத்தைக் கழிக்கின்ற   கலியுகவே (13)

இருகைக ளாலே   அஞ்சலிசெய்தால்
இறுமாப்பின் மேலே
புரியும் வணக்கமெல்லாம்
போதத் தனக்கென்றெண்ணி
பெருமாள் மாடுபோலப்
பேச்சின்றித் தலையாட்டுங் கலியுகவே (14)

குற்றமொன் றாலே   பலநன்றிகளைக்
கொல்லுந்தன் காலே
கட்டச்சங் கிலித்தும்பிக்
கையா லெடுக்கும்யானைக்
கவடுகொள் வார்தன்னைக்
காட்டிக் கொடுக்கும்இந்த   கலியுகவே (15)

ஞானத்தின் எல்லை   கடக்கப்பேசி
நாட்டித்தன் சொல்லை

வீணான பேச்செல்லாம்
வேதாந்தப் பொருளென்று
நாணாமல் வேசைக்கு
நமஸ்காரஞ் செய்கின்ற கலியுகமே (16)

கணவனை யல்லால் தெய்வமென்றானுங்
காண்பதே யில்லாக்
குணமாங் கற்புடைமாதர்
குடும்பங் கலைத்துமோசம்,
பழி,பாவ மென்றெண்ணாப்
பாதகர் மிதமிஞ்சுங் கலியுகமே (17)

பாவமென் றறிந்தே துணிந்துசிலர்
பஞ்சாயம் புரிந்தே
கோவிற் பொருளையெல்லாங்
கொள்ளையிட் டிறுதியில்
நாயாய்ப் பிறப்பதற்கு
நாணஞ்சே னெனக்கூறும் கலியுகமே (18)

என்னையா னறிந்தேன் தலைவனையும்
இரண்டறக் கலந்தேன்
இன்னம் பிறக்கப்போவ
திலையென்று மௌனமாய்
உண்மைச்சன் யாசியாய்
உலகத்தை யேமாற்றும் கலியுகமே (19)

பணிப்பெண்ணைக் கூடி கெற்பமாமென்ற
பழிக்கஞ்சி யோடி
சுணக்கமாய்க் குலைக்காத
சுணங்கன்போ லிருந்தெங்கும்

குணக்கேடு செய்கின்ற
குடிகெடக் கிடந்தருங் கலியுகமே (20)

சந்தர்ப்பங் கொடுத்து உதவிசெய்யுந்
தன்மையை விடுத்து
இன்றைக்கு நாளைக்கென்
றேழைக் காசைவார்த்தை
நம்பிக்கை விடச்சொல்லும்
நாஸ்திகர் களுக்கேற்ற கலியுகமே (21)

பெரியோரை யிழுத்து வம்புசெய்கூட்டம்
பெருத்துடல் கொழுத்து
அறியாயோ எமைநீயென்
றனியாய மாய்ப்பேசி
பழிகாரர் செய்வதை
பகர்தற்கு முடியாத கலியுகமே (22)

# இம்மையிற் செய்வனவும், இருமையிற் பெறுவனவும்,

HMSU P
N31

அறுசீர் விருத்தம்.

கடல்,வானம், புவிநெருப்பு
காற்றைந்தும் படைத்துநமைக்
காக்குந் தெய்வச்
சுடரொளியை நிதந்தொழுது
தாய்நாட்டிற் குழைத்து,மனத்
தூய்மை கொண்டு,
சுடமலைக்கு மரணபயந்
தனைநினைத்துப் பொறைமிகுத்துத்
தளர்ந்தோர்க் கீந்து,
படிறகற்றித், தீங்கொழித்து,
நல்லானென் றிருந்திருமைப்
பயன்,கொள் வீரே,

வாழி விருத்தம்.

பரம்பொரு ளிருக்கை தன்னைப்
பார்த்தவர் வாழி யேத்த
நிரந்தரம் உலகோர்க் காட்டி
நிறுவிய பெரியோர் வாழி
பரந்தமுத் தமிழ்நூல் வாழி
பாவலர் வாழி நாட்டின்
தரந்தெரிந் துதவும் இந்நூல
சாற்றினோர் வாழி வாழி.

சம்பூர்ணம்.

சுபம். சுபம். சுபம்.

# தேசிய கீதம்.

விஜயபுரம் கீர்த்தன இரத்னுகாம்,

உயர்திரு சி. முத்துசாமித் தேவர் அவர்கள் பாடியது.

---

பண்டிதமோத் திலால்நேரைப் பரிகோடுத்தோமே.

யென்ற மெட்டு.

பல்லவி.

இந்துதேசத் தில்பிறந்த இந்தியர்களே இந்து

அனுபல்லவி.

இந்தியர்களே சு தந்திரர்களே இந்து

சரணம்.

இன்னுமா தூங்குகின்றீர் பெண்ணருகில் மோகமுடன்
கண்ணனுப தேசமொழியைக் காணீர்களோ இந்து
பத்தாவ தாரஞ்சென்று பதினொன்ருய் அவதரித்து
கத்தாணி வீசென்றுரைக்குங் காந்திக்குஜே இந்து
சுத்தகதர் வாங்கிநீங்கள் தத்துவமு டனணிந்தால்
மெத்தவுப காரமுண்டு மேதினிக்கே இந்து
கள்ளுங்,கஞ் சா,அபினும், கருவேலின் சாராயமும்,
கொல்லும் பிராந்தியிவ்வகைக் குடி நீக்குவீர் இந்து
கத்துகடல் நீரையுப்பு காய்ச்சியகம் சோதரர்கள்
தத்தளித்துக் கலங்கிச்சிறையை சார்தனரே இந்து
அகிம்சா தர்மமொன்றே ஆதார மாகுமென்று
பகிரங்க மாகவுலகில் பகர்ந்த தல்லால், இந்து
தாரணியி லவரவர்கள் தந்தெய்வ மாகஎண்ணும்
காரணகு ருவாய்வந்த காந் திக்குஜே இந்து
தண்டமிழைப் போற்றுமுத்து சாமியுங்கள் சார்பிற்
[சொன்னேன்
என்றென்றுந் தேசத்தொண்டை யியற் றுவீரே இந்து

---

சுபம். சுபம். சுபம்.